**இந்திய அரசு**
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6, கல்லூரி சாலை, சென்னை - 600006
தொலைபேசி : 044- 28271951

**GOVERNMENT OF INDIA**
INDIA METEOROLOGICAL DEPARTMENT
Regional Meteorological Centre
No. 6, College Road, Chennai–600006
Phone: 044- 28271951.

| DATE:08-10-2021 | Time of Issue:1230 |
|---|---|

# வானிலை தகவல்

**தென் மேற்கு பருவ காற்று மற்றும் வெப்பச்சலனம்** காரணமாக

08.10.2021, 09.10.2021: வட மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழையும், தென் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும் பெய்ய கூடும்.

10.10.2021: நீலகிரி, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும், வட மாவட்டங்கள் மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழையும், தென் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய கூடும்.

11.10.2021, வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, திருவள்ளூர், காஞ்சிபுரம், டெல்டா மாவட்டங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும், வட மாவட்டங்கள் மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழையும், தென் மாவட்டங்களில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய கூடும்.

12.10.2021: நீலகிரி, கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல் மற்றும் சேலம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழையும், மேற்கு தொடர்ச்சி மலை ஒட்டிய மாவட்டங்கள், கடலோர மாவட்டங்கள் மற்றும் புதுவை, காரைக்கால் பகுதிகளில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழையும், ஏனைய மாவட்டங்களில் அநேக இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய கூடும்.

சென்னையை பொறுத்தவரை
அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய கூடும்.
**அதிகபட்ச வெப்பநிலை 32 மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும்.**

கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (சென்டிமீட்டரில்):
பள்ளிப்பட்டு (திருவள்ளூர்) 15, பென்னாகரம் (தர்மபுரி) 8, சோளிங்கர் (ராணிப்பேட்டை) 5, கிருஷ்ணகிரி, நடுவட்டம் (நீலகிரி) தலா 4, போளூர் (திருவண்ணாமலை), எருமைப்பட்டி (நாமக்கல்), கொப்பம்பட்டி

(திருச்சிராப்பள்ளி) 3, கன்னியாகுமாரி, ஏற்காடு (சேலம்) தலா 2, பாலக்கோடு (தர்மபுரி), மன்னார்குடி (திருவாரூர்), வாடிப்பட்டி (மதுரை), தாளவாடி (ஈரோடு),

சின்னக்கல்லார் (கோவை), ஒரத்தநாடு (தஞ்சாவூர்), பொண்ணை அணை (வேலூர்), மஞ்சளாறு (தேனி) தலா 1.

குறிப்பு : வரும் 10 ஆம் தேதி மத்திய கிழக்கு வங்க கடல் பகுதியில் ஒரு குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாக வாய்ப்புள்ளது.

மீனவர்களுக்கான எச்சரிக்கை:

## வங்கக் கடல் பகுதிகள்

**08.10.2021 முதல் 10.10.2021: அந்தமான் கடல் பகுதிகள் மற்றும் தென் கிழக்கு வங்க கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.**

**11.10.2021,12.10.2021: தெற்கு வங்க கடல் பகுதிகள் மற்றும் அந்தமான் கடல் பகுதிகளில் பலத்த காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.**
மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## அரபிக்கடல் பகுதிகள்

08.10.2021, 09.10.2021: மத்திய கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள் .

மேலும் விவரங்களுக்கு: imdchennai.gov.in இணையதளத்தை காணவும்.

முனைவர் நா. புவியரசன்
இயக்குனர்
சென்னை வானிலை ஆய்வு மையம்

01.10.2021 முதல் 07.10.2021 வரை பெய்த மழை அளவு

| மாவட்டம் | பதிவான மழை (மி.மீ) | இயல்பு மழை (மி.மீ) | வேறுபாடு (%) |
|---|---|---|---|
| அரியலூர் | 59.9 | 52.4 | 14 |
| செங்கல்பட்டு | 116.0 | 41.2 | 181 |
| சென்னை | 93.6 | 44.3 | 111 |
| கோயம்புத்தூர் | 80.3 | 33.1 | 142 |
| கடலூர் | 59.9 | 39.0 | 53 |
| தர்மபுரி | 37.1 | 53.5 | -31 |
| திண்டுக்கல் | 111.9 | 39.9 | 180 |
| ஈரோடு | 121.6 | 34.3 | 255 |
| கள்ளக்குறிச்சி | 62.2 | 50.2 | 24 |
| காஞ்சிபுரம் | 121.8 | 39.5 | 208 |
| கன்னியாகுமரி | 77.3 | 48.1 | 61 |
| காரைக்கால் | 24.8 | 32.2 | -23 |
| கரூர் | 102.0 | 28.1 | 263 |
| கிருஷ்ணகிரி | 53.7 | 54.5 | -1 |
| மதுரை | 89.5 | 41.2 | 117 |
| மயிலாடுதுறை | 42.5 | 36.1 | 18 |
| நாகப்பட்டினம் | 30.7 | 37.3 | -18 |
| நாமக்கல் | 90.4 | 36.6 | 147 |
| நீலகிரி | 121.9 | 51.3 | 138 |
| பெரம்பலூர் | 62.3 | 38.2 | 63 |
| புதுச்சேரி | 66.2 | 41.7 | 59 |
| புதுக்கோட்டை | 88.9 | 34.2 | 160 |
| ராமநாதபுரம் | 79.5 | 25.9 | 207 |
| ராணிப்பேட்டை | 97.6 | 39.0 | 150 |
| சேலம் | 37.6 | 46.3 | -19 |
| சிவகங்கை | 134.9 | 38.8 | 248 |
| தென்காசி | 25.8 | 22.0 | 17 |
| தஞ்சாவூர் | 41.7 | 38.2 | 9 |
| தேனி | 69.3 | 29.4 | 136 |
| திருநெல்வேலி | 62.9 | 15.3 | 311 |
| திருப்பத்தூர் | 39.2 | 44.4 | -12 |
| திருப்பூர் | 67.4 | 31.0 | 117 |
| திருவள்ளூர் | 88.7 | 40.8 | 117 |
| திருவண்ணாமலை | 77.8 | 46.6 | 67 |
| திருவாரூர் | 61.7 | 33.8 | 83 |
| தூத்துக்குடி | 12.3 | 15.1 | -19 |
| திருச்சிராப்பள்ளி | 85.9 | 40.2 | 114 |
| வேலூர் | 83.8 | 41.7 | 101 |
| விழுப்புரம் | 93.3 | 41.7 | 124 |
| **விருதுநகர்** | 38.0 | 27.0 | 41 |